திருவாபரணம்

செங்கோட்டையிலிருந்து 50 கி.மீ. தூரம். கேரளத்தின் சிறப்பு மிக்க சாஸ்தா கோயில்களில் இதுவும் ஒன்று. அழகிய நதியும், பள்ளத் தாக்கும் கண்கவரும் இயற்கை விருந்தாக இனிமை தருகிறது. குழந்தை வடிவிலான ஐயப்ப விக்ரகம் குளத்துப்புழை நதியில் கிடைத் தது என்றும் அதுவே பிரதிஷ்டை என்றும் கூறுவர். சித்திரை விஷூ அன்று கனிகாணும் நிகழ்ச்சி சிறப்பாக நிகழும். விஷூ ஊர்வலம் முக்கியமானது. 41 நாட்கள் மண்டல பூஜை வழிபாடுகளும் சிறப்பாக நடைபெறுகின்றன. வித்யாரம்பம் மற்றொரு சிறப்பு நிகழ்ச்சியாகும். ஆற்று மீன்களுக்கு உணவளித்தலும் ஓர் வழி பாடாகவே நிகழ்கிறது. நடை திறப்பு- காலை: 5.00 முதல் 11.30; மாலை: 5.00 முதல் 7.30.


சகஸ்ர கலச பூஜை

## கூட்டு வழிபாடு

சபரிமலை யாத்திரை கூட்டு வழிபாட்டை மேம்படுத்துகிறது. அன்பு, ஒற்றுமை, சமத்துவம், சகிப்புத்தன்மை என்னும் சிற்றோடைகளின் பிரவாகமும் சந்நிதானம் நோக்கி நகர்கின்றன. தனித்தனிப் பாதங்களின் நெடும் பயண நடையும், தனித்தனிச் சிரங்களின் இருமுடிச் சுமையும், தனித் தனி நாவு களின் சரண ஒலி முழக்கமும், தனித் தனிக் கரங்கள் ஏற்றும் கற்பூரச் சுடர்களும், தனித்தனி நெய்த் தேங்காய்களின் உடை வில் சொரியும் நெய்யபிஷேகமாக ஐயப்பன் மீது வீழ்கிறது. சிறு கச் சிறுகத் தேர்ந்து சேர்ந்தவை பெருகி மாறிய கூட்டமுதாகின் றது. சந்நிதானத்தில் தன் வசம் நீங்கிய பரவச மாற்றம் நிகழ் கிறது. கூட்டு வழிபாட்டின் சாதனை இது.

ஆன்மீகத்தில் உள்ளொளிப் பயணத்தின் உன்னதங்கள் புறத்தளச் செயல்பாடுகளில் பரவுதல் பெறும்; புறத்தளச் செயல் பாடுகள் உள்ளொளியின் உன்னத நிலை நோக்கி நகர்த்தும். இவ்வகையான ஒத்திசைவுப் புலமே கூட்டு வழிபாடு.

## கொக்கரினி

மாளிகைப்புறத்தம்மன் சந்நிதி வளாகத்தில் அமைந்துள்ள கிணறு. நைவேத்யம் மற்றும் கோயில் பயன்பாட்டிற்கு இக் கிணற்று நீரே பயன்படுகிறது. சபரிமலை சந்நிதானத்தில் பயன் படும் இப்புனித நீர் வற்றாத நன்னீராகும்.

# ச

## சகஸ்ரகலசம்

சகஸ்ர கலச பூஜை என்பது சபரிமலை சந்நிதானத்தில் நிகழ்த்தும் ஒரு வகையான சிறப்பு பூஜை. ஆயிரம் கலசங்களில் புனிதமான நீர் நிரப்பி நிகழ்த்தப் பெறும் பூஜை இது. மலையாள மாதங்களின் முதல் நாட்களில் இப்பூஜை நிகழ்த்துவது வழக்கம். திருவுருவின் அருளாற்றலை மேம்படுத்தும் சடங்கு இது.

## சந்நிதானம்

கடல் மட்டத்துக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் அடி உயரத்தில் உள்ளது சபரிமலை சந்நிதானம். பெருந்தோடு எனும் இடத் துக்குத் தென்கிழக்கே சுமார் 25 மைல் தூரத்தில் அமைந்தது. சுற்றிலும் கல்பதித்து எழுப்பிய சம மேட்டில் ஒளிவீசித் திகழ் கிறது. கோடிக்கணக்கான மனித மனங்களின் தெய்வீக ஆர் வம் தணிந்திடும் அற்புத இடம். விரதங்களின் சங்கமத்தலம். இறையருளின் இனிமைப் பிரவாகத்தில் திளைக்கும் பக்தர் களின் பாதமலர்களின் பதிவு தளம். ''சாமியே...சரணமய்யப்பா! ஹரிஹர சுதனே சரணமய்யப்பா'' எனும் சரண ஒலியில் ஆன்ம எழுச்சி பெறும் இடம்!.

## சபரி பீடம்

அப்பாச்சி மேட்டை அடுத்து வருவது சபரி பீடம். சபரியின் தபஸால் புனிதமுற்ற இடம். சபரியின் மோட்சத்தால் பெருமை யுற்ற இடம். ஐயப்ப பக்தர்கள் பீடத்தை வலம் வருவர்; தேங்காய் உடைத்துக் கற்பூரம் ஏற்றி வழிபடுவர். புராண இதிகாசக் கீற்றுகள் தரும் ஆன்மீக இனிமையைப் புனித யாத்திரைப் பிர தேசங்களில் இசைவுபடுத்தி ஆன்மவளம் பேணுவதை இங்கு காண்கிறோம்.

## சபரிமலை

கேரள சாஸ்தா கோயில்களில் மிகவும் பிரசித்தி பெற்றது சபரி மலை ஐயப்பன் கோயில். இம்மலை சபரியின் பெயரால் அமைந்தது மிகவும் பொருத்தமே.

பக்தி மண்டலத்தில் சபரியின் பெயர் சாசுவதமானது. அவள் வேட்டுவப் பெண். விலங்கினக் கொலை கண்டு வருந்தி வீட்டி னின்று வெளியேறினாள். மதங்கர் ஆசிரமத்தில் மறைந்து மறைந்து வாழ்ந்தாள். முனிவர்க்கு ஆசிரமப் பணிகள் செய்து அங்கு வாழிடம் பெற்றாள். முனிவர் மதங்கர் அவளுக்கு இராம தரிசனம் கிடைக்கும் என்றார். காலம் கனிந்தது. காத்திருந்த சபரி ராமதரிசனம் பெற்றாள். ருசி பார்த்துத் தேர்ந்தெடுத்த இலந்தைக் கனிகள் தந்து ராமன் அருள் பெற்றாள். அவள் நினைவினை உணர்த்துமிடம் சபரிமலை; அவள் நினைவினை வளர்த்துமிடம் சபரிமலை. இத்தகைய சபரிமலையைத் தன் அருட்சுரப்புக்குரிய ஆலயமாகத் தேர்ந்து கொண்டான் ஐயப் பன். ஆலயத்துக்குரிய இடமாக அவன் அம்பு சென்று தைத்த இடமே இன்று இலட்சக் கணக்கானவர்கள் ஆண்டுதோறும்